IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# நாஞ்சில்

**முனைவர் சே. கரும்பாயிரம்**
இளநிலை ஆராய்ச்சி அலுவலர்
சுவடியியல் புலம்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை – 600 100

**முன்னுரை**

நாஞ்சில் என்னும் சொல் தொன்மையுடையது. இச்சொல் சங்க இலக்கியத்தில் உழவுக்கருவி, மலை என்பனவற்றுக்கும் இடைக்கால இலக்கியமான கம்பராமாயணம், கல்லாடம் உள்ளிட்டவற்றில் படைக்கருவி, மதிலுறுப்பு என்பனவற்றுக்கும் பெயராக வழங்குகிறது. இன்றைக்கும் நாஞ்சில் என்ற சொல் குறிப்பிட்ட வட்டாரத்தில் வழங்கக்கூடிய பண்பாடு, பழக்கவழக்கம் முதலானவற்றை அடையாளப்படுத்துவதற்குப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. அவ்வகையில் நாஞ்சில் என்ற சொல் உணர்த்தும் பொருள் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**நாஞ்சில்**

நாஞ்சில் என்ற சொல்லானது, **“கலப்பை, மதிலுறுப்பு, வள்ளுவன் என்ற தலைவற்கு உரியதாயிருந்த ஒரு மலை”**[1] என்னும் பொருள்கள் தருவதாகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. இவற்றில் கலப்பை, வள்ளுவன் என்ற தலைவற்கு உரியதாயிருந்த ஒரு மலை என்பவற்றைச் சங்கப் புலவர்களும் மதிலுறுப்பு என்பதைக் கம்பரும் நாஞ்சில் என்னும் பொருள் கொண்டு குறிப்பிட்டுள்ளனர். இச்சொல்லை **நங்கூரம், நாங்கூழ்** ஆகிய சொற்களுடன் தொடர்புபடுத்துவதை, **“நங்கூரம் வடிவத்திற் கலப்பை போன்றிருப்பதால், அப்பெயர் பெற்றது. நாங்கூழ், நாகேல (தெ.), நாஞ்சில் என்பன கலப்பைப் பெயர்கள்”**[2] என்று குறிப்பிடுவதால் அறியலாம். எனவே, நாஞ்சில் என்பது அதன் வடிவத்தால் பெயர் பெற்றது என்பதை அறியமுடிகிறது. இங்கு இவ்வடிவம் கொண்ட படைக்கருவியை நாஞ்சில் என்று குறிப்பிடுவதையும் சான்றாகக் கூறலாம். உழவுக்கருவி, படைக்கருவி என இருவகை பொருளில் வழங்கும் நாஞ்சில் என்ற சொல்லாட்சி இன்றைய வழக்கில் காணப்படவில்லை. இவ்வாறு ஒரு சொல் வழக்கில் அரிதாகிப் போவதற்கு மக்களிடம் அச்சொல்

புழங்குவது குறைவதே காராணமாக அமைகிறது. இதனால் அச்சொல்லை நாளடைவில் செய்யுள் வழக்காகக் கருதுகிறோம். தற்போது அச்சொல்லுக்கு மாற்றாக ஏர், கலப்பை ஆகிய பெயர்கள் உழவுக்கருவிக்கு வழங்குவதைக் காணமுடிகிறது. ஆயினும் இன்றைய நிலையில் நாஞ்சில் என்ற சொல்லாட்சி தமிழ்நாட்டின் தென்பகுதியில் வழங்கக்கூடிய வட்டார வழக்காறுகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது.

**உழவுக்கருவி**

நாஞ்சில் என்பது நிலத்தை உழுவதற்குப் பயன்படுத்தும் மரத்தாலான கருவியாகும். இதற்குக் **கலப்பை, ஏர், உழுபடை**, **மேழி**, **படைவாள், அலம், தொடுப்பு, ஆலம்**, **சீரம், கலனை, படை, கொடுநுகம், இலங்காலி, இதை, ஞாஞ்சில், சஞ்சிவம்** ஆகிய வேறுபெயர்கள் வழங்குகின்றன. இவற்றில் ஏர், கலப்பை என ஒரு சில சொற்கள் மட்டும் மக்கள் வழக்கிலும் ஏனைய சொற்கள் இலக்கியம், நிகண்டு, அகராதி ஆகியவற்றிலும் வழங்குவதன் வழியாக அறியமுடிகிறது. அந்த வகையில் நாஞ்சில் என்ற சொல்லானது உழவுக்கருவி என்ற பொருளில் பெரும்பாணாற்றுப்படை, கல்லாடம் உள்ளிட்ட நூல்களில் இடம்பெற்றுள்ளது.

நாஞ்சிலின் வடிவமானது நிலத்தை உழுவதற்கு ஏற்றாற்போல வளைந்து காணப்படும் என்பதை, **'முடம்படு நாஞ்சில்'**[3] என்று கல்லாடம் குறிப்பிடுகிறது. அது பார்ப்பதற்குப் பெண் யானையின் வாயை ஒத்து இருக்கும் என்பதைப், **'பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்'**[4] எனப் பெரும்பாணற்றுப்படை எடுத்துரைக்கிறது.

நாஞ்சில் பல உறுப்புகளைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். அதன் உறுப்புகளைக் **கொழு, கலப்பைக்குத்தி, மேழி, ஏர்க்கால், நுகம்** என்னும் பெயர்களில் அழைக்கின்றனர். இவற்றில் கொழு தவிர ஏனைய உறுப்புகள் மரத்தைக் கொண்டு செய்யப்பட்டவையாகும். கொழுவானது இரும்பினால் செய்யப்பட்ட பட்டை வடிவத்தில் நுனிப் பகுதி கூர்மையுடையதாக இருக்கும். அதனால் இதனை **இரும்புக்கொழு** என்று சொல்வதுண்டு. இது கலப்பைக்குத்திப் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும். இதன் கூர்மைப்பகுதி காந்தள் மலரின் மொட்டுப் போல இருக்கும் என்பதைக், **'கோட லீன்று கொழுமுனை கூம்ப'**[5] என்றும் உடும்பின் முகம் போல இருக்கும் என்பதை, **'உடுப்பு முகத்தை கூர்ங் கொழூ'**[6] என்றும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. எனவே, இலக்கியங்கள் வழியாக நாஞ்சிலின் வடிவத்தையும் அதன் உறுப்பான கொழுவின் வடிவத்தையும் அறியமுடிகிறது.

**நாஞ்சில் விழா**

மக்கள் உழுதல், விதைத்தல் முதலான வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுதற்கு முன்பாக நல்ல நாள் பார்த்துத் தொடங்குவது வழக்கம். அந்த வகையில் நிலத்தை உழுவதற்கு முன்பாக நல்ல நாளில் உழவுக்கருவிக்குப் பூ உள்ளிட்ட பொருட்களைக் கொண்டு அலங்கரித்து இறைவழிபாடு செய்வர். பின்னர் அலங்கரித்த உழவுக்கருவியைக் கொண்டு நிலத்தை முதன்முதலாக உழுவர். இதனைப்

**பொன்னேர் பூட்டுதல்** என்பர். பொன்னில் செய்யப்பட்ட ஏரினைக் கொண்டு நிலத்தினை உழுவதால் இப்பெயர் பெறுகிறது. இச்சடங்குமுறை தொன்மையான அரசர்கள் ஆட்சி செய்த காலம்தொட்டு இருந்துவருகிறது. அவ்வகையில் இச்சடங்கினைக் கௌதம புத்தர் காலத்தில் வப்பமங்கலம் என்னும் **நாஞ்சில் விழா**[7] என்று அழைத்துள்ளனர். இன்றைய காலத்தில் நவீன இயந்திரக் கலப்பை பயன்பாட்டால் காலங்காலமாக செய்துவந்த இச்சடங்கு அருகிவருகிறது. ஆயினும் சில கிராமங்களில் மரபின் தொடர்ச்சியாக இச்சடங்கினைச் செய்து வருவதையும் காணமுடிகிறது.

**நிலம் உழுதல்**

விளைநிலங்களில் புன்செய், நன்செய் என இருவகை உண்டு. புன்செய் நிலத்திற்கு மழைநீரும் நன்செய் நிலத்திற்கு ஏரி, ஆறு உள்ளிட்ட நீர்நிலைகளின் நீரும் பாசனத்திற்காகப் பயன்படுகின்றன. அவற்றில் நீர்வளம் குறைவாகக் கொண்ட புன்செய் நிலத்திற்கு உழக்கூடிய கருவியைப் **புழுதிக்கலப்பை** என்றும் நீர்வளம் மிகுதியாகக் கொண்ட நன்செய் நிலத்த்திற்கு உழக்கூடிய கருவியைச் **சேற்றுக்கலப்பை** என்றும் வழங்குவர். இவ்வாறு நிலம் உழுதலில் உழவுக்கருவிகளில் வேறுபாடு இருந்தாலும் நாஞ்சில் என்பது புன்செய், நன்செய் ஆகிய இருநிலங்களுக்கும் பொதுக் கருவியாக விளங்கியதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

மழை இன்மையால் புன்செய் நிலத்தை உழுவதற்குரிய நாஞ்சில் என்னும் உழவுக்கருவி பயன்படாமல் இருந்தது என்பதை,

**“நாடுவறங் கூர நாஞ்சில் துஞ்சக்**
**கோடை நீடிய பைதறு காலை”**[8]

என்று பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

புன்செய் நிலத்தில் மழை பொழிந்த பின்னர் அந்நிலத்தில் உழவர்கள் பல எருதுகளை நாஞ்சில்களில் பூட்டி உழுதனர். அப்பொழுது நாஞ்சிலின் கொழு சென்ற வழியில் கிடைக்கக்கூடிய ஒளியுடைய மணிகளைப் பெறுவார்கள் என்பதை,

**“சீருடைப் பல்பக டொலிப்பப் பூட்டி**
**நாஞ்சி லாடிய கொழுவழி மருங்கின்”**[9]

என்று பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இதன் வாயிலாகப் புன்செய் நிலம் மழையை எதிர் நோக்கி இருப்பதும் மழை பொழிந்தவுடன் மண்ணிலிருந்து பதம் நீக்குவதற்கு முன்னர் நாஞ்சில் என்னும் உழவுக்கருவிகளைக் கொண்டு நிலத்தை உழவேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

நீர்வளமுடைய மருத நிலத்தில் நல்ல இசையுடன் பாடுகின்ற உழவர்கள் நாஞ்சிலில் எருதினைப் பூட்டி உழுதனர் என்பதை,

**“பண்கா லுழவர் பகடுபிடர் பூண்ட**
**முடப்புது நாஞ்சி லள்ளல்புக நிறுத்தி”**[10]

என்கின்றன பாடலடிகள். எனவே, புன்செய், நன்செய் ஆகிய இருவகை நிலங்கள் உழுவதற்கும் நாஞ்சில் என்ற சொல்லாட்சி கொண்ட உழவுக்கருவி பயன்படுத்தியதை அறியமுடிகிறது.

**போரும் உழவுக்கருவியும்**

நவீன காலத்திற்கு முன்பு வரை பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மைத் தொழில் முதன்மையாக இருந்தது. வேளாண்மைத் தொழிலை மையமாகக் கொண்டே அரசுகள் இயங்கின. அரசர்கள் ஒரு நாட்டைக் கைப்பற்றியபொழுது பெரிதும் பாதிக்கப்படுவது அந்நாட்டின் வேளாண்மைத் தொழிலுக்குரிய விளைநிலங்களாகும். விளைநிலங்கள் உருவாக்கத்தில் உழவுக்கருவி முதன்மையாக அமைகிறது. இவ்வுழவுக்கருவியைப் போர் நடைப்பெற்ற செய்திகளைக் கூறும் சில பாடல்களில் புலவர்கள் காட்சிப்படுத்தியுள்ளனர். அந்த வகையில் சேரன் பகைவர் நாட்டை வென்றதால் வேளாண் குடிகள் அந்நாட்டை விட்டு சென்றனர். அதனால் அந்நாட்டின் நிலங்களில் உழவுக்கருவி கொண்டு உழுதல் நடைபெறாமல் போயின. இதனை,

**"இனந்தோ டகல வூருட னெழுந்து**

**நிலங்கண் வாட நாஞ்சில் கடிந்து"**[11]

என்கின்றன பாடலடிகள். இதன்மூலம் போர் ஏற்பட்டால் மக்கள் தன் நாட்டில் தொழில் செய்வதை விட்டுப் புலம்பெயர்வர் என்பதை அறியமுடிகிறது.

பதிற்றுப்பத்தில் சேரனுடைய குதிரைப் படைகள் சென்றதனால் வயல்கள் சேறாகின. அதனால் உழவுக்கருவிகள் அந்நிலத்தில் உழுவது வேண்டாது ஆயின என்பதை, **'மாவா டியபுல நாஞ்சி லாடா'**[12] என்கிறது பாடலடி. மேலும், தேர்கள் சென்ற நிலங்கள் உழவுக்கருவிகளைக் கொண்டு உழுதலுக்கு வேண்டாது ஆயின என்பதோடு பன்றிகள் தன் கொம்பினால் கொல்லையில் விளைந்த கிழங்குகளை உண்பதற்குக் குத்திக் கிளருவதனால் அந்நிலங்கள் உழுவதற்கு வேண்டாது ஆயின என்பதை,

**"தேஎர் பரந்தபுல மேஎர் பரவா**

**களி றாடியபுல நாஞ்சி லாடா"**[13]

என்று பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இங்குக் களிறு என்றது பன்றியைக் குறிக்கும். இவ்வாறு போருக்குப் படைகள் சென்றதனால் உழவுக்கருவிகள் கொண்டு உழாமல் விளைநிலங்கள் சேறாகின என்று மிகைப்படுத்திக் கூறினாலும் அந்நிலங்கள் பயிரிடுவதற்கு ஏற்றாற்போலப் பக்குவம் அடைந்திருக்காது என்பதை ஊகிக்கமுடிகிறது.

**யானையும் நாஞ்சிலும்**

புலவர்கள் போரில் ஈடுபடும் யானைகளின் செயல்பாடுகளை நாஞ்சில் என்னும் உழவுக்கருவியோடு ஒப்பு நோக்கியுள்ளனர். அந்த வகையில் போரில் ஈடுபட்டு வலிமை இழந்த யானை அதன் கொம்பினை நிலத்தில் ஊன்றி இருந்தது. அது பார்ப்பதற்கு நீரற்ற நிலத்தில் உழுகின்ற நாஞ்சிலைப் போல இருந்ததாம் என்பதைப் பெருங்கடுங்கோ,

**“உறலூறு கமழ்கடாத் தொல்கிய வெழில்வேழம்**

**வறனுழு நாஞ்சில்போன் மருப்பூன்றி நிலஞ்சேர”**[14]

என்ற பாடலடிகளில் குறிப்பிடுகிறார். மேலும், வெள்ளியால் செய்யப்பட்ட கலப்பையைக் கொண்டு நிலத்தை உழுவது போல் யானையின் தந்தங்கள் நிலத்தைக் குத்தியிட்டுக் கிடந்தன என்பதைப் பொய்கையார்,

**“வெள்ளிவெண் ணாஞ்சிலான் ஞால முழுவனபோ**

**லெல்லாக் களிறு நிலஞ்சேர்ந்த”**[15]

என்று கூறுகிறார். இவ்வாறு புலவர்கள் உழவுக்கருவிக்குரிய சொல்லாக நாஞ்சில் என்பதைக் குறிப்பிடுவது பண்டைய மக்களிடம் அச்சொல் பரவலாக வழங்கில் இருந்திருக்கவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

**படைக்கருவி**

முன்னோர்கள் மழு, வச்சிரம், சூலம், வேல், வில், அம்பு, கணிச்சி, வளைதடி, வாள், கணையம், குந்தம், ஈட்டி, கழு, சூலம், நாஞ்சில் போன்ற படைக்கருவிகளைப் போரில் பயன்படுத்தினர். அவற்றில் நாஞ்சில் என்னும் படைக்கருவியைப் போர்த் தொழில் பயன்படுத்தியதை இலக்கியங்கள் கூறுகின்றன. அக்கருவி உழவுக்கருவியின் வடிவம் பெற்றிருந்ததால் **நாஞ்சில்**[16] என்ற அதன் பெயரிலேயே வழங்கியதைக் கம்பராமாயணம் குறிப்பிடுகிறது. இதன் வேறுபெயராக **அலாயுதம்**[17] வழங்கியதைத் தக்கயாகப்பரணி குறிப்பிடுகிறது.

உழவுக்கருவியின் கொழு போன்று நாஞ்சிலின் படைக்கருவியும் கூர்மையுடையதாக இருக்கும் என்பதை, **‘வாய்வாங்கும் வளைநாஞ்சில்’**[18] என்று பரிபாடல் குறிப்பிடுகிறது. இக்கருவியை வீரர்கள் ஒருவர் மேல் ஒருவர் கையினால் வீசிப் போரிடுவர். அப்பொழுது அக்கருவியின் கூர்மைப்பகுதி உடலில் ஊடுருவும்படி பாயும் என்பதை,

**“தோளையுஞ் சுடர்கெழு நாஞ்சில் வாயினால்**

**ஆளியே றனையவ னழுந்த வூன்றினான்”**[19]

என்று பாடலடிகள் குறிப்பிடுகின்றன. எனவே, உழவுக்கருவியின் கூர்மைப்பகுதி நிலத்தைக் கிழிப்பது போலப் படைக்கருவியின் கூர்மைப்பகுதியும் மனிதர்களின் உடலைக் கிழிப்பதற்கு ஏதுவாக அமைந்திருக்கும் என்பது பெறப்படுகிறது.

**படைக்கருவியும் விளைநிலமும்**

வீரர்கள் நாஞ்சில் என்னும் படைக்கருவியைப் பயன்படுத்திப் போரில் வெற்றி பெறுவது போல அதன் பெயர் கொண்ட உழவுக்கருவியைப் பயன்படுத்தி நிலத்தை உழுது அதில் நெல் பெறுவதும் இணைத்து உவமையாகக் காட்சிப்படுத்துவதைப் புலவர்கள் கையாண்டுள்ளனர்.

**“வானவர் மருள நாஞ்சின் மற்றிது மடுத்து மாற்றார்**
**தேனம ரகல மென்னுஞ் செறுவுசெஞ் சால்கள் போக்கி**
**யூனமர் குழம்பு பொங்க வுழுதிட்டு வென்றி வித்தி**
**யேனவர் செவிக ளார விரும்புகழ் விளைப்ப னென்றான்”**[20]

என்னும் சூளாமணி பாடலடியில் நாஞ்சில் என்னும் படைக்கருவியைக் கொண்ட ஒருவன் பகைவரின் மார்பாகிய வயலில் உழுது இரத்தமாகிய சேறு மிகும்படி செய்து வெற்றி என்னும் விதையை விதைத்து உலகினரின் காதுகளாகிய வாயால் உண்ணப்படும் பெரும் புகழாகிய நெல்லை விளைப்பேன் என்றான் என்பதை எடுத்து இயம்புகிறது. இச்செய்தியை சூளாமணியின் 1408-ஆம் பாடலும் கூறுகின்றது. எனவே, பண்டைய காலத்தில் உழவர்களே போர் வீரர்களாகவும் போர் வீரர்களே உழவர்களாகவும் இருந்தனர் என்பதற்கு இக்கருவியானது வேளாண்மை, போர் ஆகிய இருவகையான தொழிலுக்கும் பயன்படுத்தியதே சான்றாக அமைகிறது.

**தெய்வப்பெயர்**

பழந்தமிழர் பலராமனை வழிப்பட்டதைச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. பலராமன் திருமாலின் பத்து அவதாரங்களுள் எட்டாவது அவதாரத்திற்குரியவன். குறிப்பாகத் திருமால் முல்லை நிலத்துக்குரிய கடவுளாவான். இந்நிலத்தின் முதன்மையான தொழில் கால்நடை வளர்த்தலாகும். கால்நடை வளர்த்தலோடு எளிய முறையில் வேளாண்மைத் தொழிலையும் அந்நிலத்துக்குரிய மக்கள் செய்தனர். வேளாண்மைத் தொழில் செய்வதற்கு முதன்மைக் கருவியாக விளங்கியது உழவுக்கருவியாகும். இந்நிலத்தில் உழவுக்கருவி தோன்றிய காலத்தில் திருமாலின் அவதாரமான பலராமன் தோன்றிருக்க வேண்டும். சான்றாகப் பலராமன் உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்தும் கருவியாகிய நாஞ்சிலைப் படைக்கருவியாக வைத்திருந்ததைக் குறிப்பிடலாம். அதனால் அவனை **நாஞ்சிலோன்**[21] என்றும் **நாஞ்சிலான்**[22] என்றும் அழைப்பட்டத்தை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவன் போர்த் தொழிலை விரும்புபவன் என்பதை, **‘அடல்வெந் நாஞ்சில்’**[23] என்னும் பாடலடி எடுத்துரைக்கிறது.

பலராமனுக்குக் கருடக்கொடி, பனைக்கொடி, நாஞ்சில்கொடி, யானைக்கொடி எனப் பல கொடிகள் உள்ளன. இவற்றில் நாஞ்சில் கொடியைக் குறித்து **‘நின் னொன் றுயர்கொடி நாஞ்சில்’**[24] என்கிறது பாடலடி.

பலராமன் ஒரு முறை தனக்குரிய படைக்கருவியாகிய நாஞ்சிலைக் கையில் எடுத்துக் கொண்டு அத்தினாபுரிக்குச் சென்றான். அங்கிருந்த அரண்மனையிலுள்ள மதிலைத் தன் கையில் வைத்திருந்த நாஞ்சிலால் மாட்டி இழுத்தான். இதனால் அந்நகரமே ஆண்டம் கண்டது என்பதைப் புராணச் செய்தியின் வழி அறியமுடிகிறது. எனவே, உழவுக்கருவியைக் கொண்டு வேளாண்மைத் தொழிலைச்

செய்யத் தொடங்கிய சமூகத்தில் பலராமன் தோன்றினான் என்பதும் அதனால் அந்த ஆயுத்தைப் படைக்குப் பயன்படுத்தினான் என்பதும் அதுவே அவனுக்குப் பெயராக வழங்கியதும் அறியமுடிகிறது.

**மதிலுறுப்பு**

நாஞ்சில் என்பது **மதிலுறுப்பு**[25] என்னும் பொருளைத் தரும் என்பதைத் திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. அவ்வகையில் பழமையான நகரிலிருந்த மதிலின் மேல் பொன்னால் செய்த குருவித் தலைபோல் நாஞ்சில் மதிலுறுப்பை அமைக்கப் பெற்றிருந்ததைக், **'கனக நாஞ்சில்'**[26] எனக் கம்பராமாயணம் குறிப்பிடுவதன்வழி அறியலாம். இக்கனக நாஞ்சிலை 4829:1-ஆம் பாடலிலும் கூறுவதைக் காணமுடிகிறது. இவ்வாறு நாஞ்சில் வடிவம் பெற்ற மதிலுறுப்புக் குறிக்கப்படுவதால் பலவகை வேலைப்பாடுகள் கொண்ட மதிலுறுப்புகள் பல மதில்களில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பது புலப்படுகிறது.

**நாட்டுப்பெயர்**

பாண்டிய நாட்டுத் தென் பகுதியான குமரி முனைக்கும் நாகர்கோவிலுக்கும் இடைப்பட்ட இடத்தில் இருந்த ஒரு மலைக்கு நாஞ்சில் என்ற பெயர் வழங்கியது. முன்னோர்கள் அம்மலைக்குட்பட்ட நாட்டினை **நாஞ்சில் நாடு** என்று அழைத்துள்ளனர். பண்டைய காலத்தில் இப்பகுதியை வள்ளுவன் என்ற குறுநில மன்னன் ஆட்சி செய்ததால் அவன் **நாஞ்சில் வள்ளுவன்** என்று அழைக்கப்படுகிறான். அவனுக்கு **நாஞ்சில் பொருநன்**[27] என்ற மற்றொரு பெயருமுண்டு. இம்மன்னன் ஆட்சி செய்த இப்பகுதியில் பலா உள்ளிட்ட மரங்கள் செழித்துக் காணப்பட்டதோடு உழவர் உழாமலே நல்ல வளமுடையதாக நிலங்கள் இருந்தன என்பதை, **'உயர்சி மையவுழா நாஞ்சிற் பொருந'**[28] என்று பாடலடி எடுத்துரைக்கிறது.

இவ்வாறு நாஞ்சில் என்று வழங்கிய பெயர் இன்றைக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தின் அகத்தீஸ்வரம், தோவாளை ஆகிய வட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்குப் பெயராக வழங்குவதைக் காணமுடிகிறது. அது போன்று கன்னியாகுமரியின் தென்கோடிப் பகுதியை **நாஞ்சில் முனை** என்று கூறுவதுமுண்டு. தற்பொழுது இப்பகுதியில் பிறந்தவர்கள் தன் பெயருக்கு முன்னால் அடையாக நாஞ்சில் என்னும் சொல்லினைச் சேர்த்துக் கொள்கின்றனர். சான்றாக நாஞ்சில் நாட்டிற்குட்பட்ட வீர நாராயணமங்கலத்தில் பிறந்து நாவல், சிறுகதை எழுதி வரும் க. சுப்பிரமணியம் என்பவர் புனைப்பெயராக **நாஞ்சில் நாடன்** என அழைக்கப்படுவதைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

நாஞ்சில் என்ற சொல் உழவுத்தொழில், போர்த்தொழில் ஆகிய இரண்டிற்கும் பெயராக வழங்கியதை அறியமுடிகிறது. நாஞ்சிலைக் கருவியாகக் கொண்ட பலராமன் அக்கருவியின் பெயரால் அழைக்கப்பட்டதைக் காணமுடிகிறது. மதிலுறுப்புக்குப் பெயராக நாஞ்சில் வழங்கியுள்ளதை

அறியமுடிகிறது. பண்டைய காலத்தில் நல்ல வளமுடைய மலைநாட்டிற்கு வழங்கிய நாஞ்சில் என்றும் பெயர் இன்றளவும் வழங்குவதைக் காணமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. தமிழ்ப் பேரகராதி, பக்.2203
2. ஒப்பியன் மொழிநூல், ஞா. தேவநேயப் பாவாணர், பக்.156
3. கல்லாடம், 75:7:1,2
4. பெரும்பாணாற்றுபடை, 199
5. கல்லாடம், 95:3
6. கூர்மபுராணம், 2:15:1
7. புத்தரின் வரலாறு, மயிலை சீனி. வேங்கடசாமி, பக்.13
8. அகநானூறு, 42:5,6
9. பதிற்றுப்பத்து, 58:16,17
10. கல்லாடம், 28:24,25
11. பதிற்றுப்பத்து, 19:17
12. மேலது, 25:1
13. மேலது, 26:2
14. கலித்தொகை, 8:4,5
15. களவழிநாற்பது, 40:1,2
16. கம்பராமாயணம், 9477:1
17. தக்கயாகப்பரணி, 368
18. பரிபாடல், 1:5:1,2
19. சூளாமணி, 1417:3,4
20. மேலது, 1199
21. பரிபாடல், 13:33:3,4
22. கலித்தொகை, 36:1:2
23. புறநானூறு, 56:4:1,2
24. பரிபாடல், 4:39
25. திவாகரம், 5:200
26. கம்பராமாயணம், 4742:1
27. புறநானூறு, 137:12:3,4
28. மேலது, 139:8

**துணைநூற்பட்டியல்**


1. இராகவையங்கார், ரா. (உ.ஆ.), 1958 பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும், அண்ணாமலை நகர் (இரண்டாம் பதிப்பு).
2. சண்முகசுந்தர முதலியார் (ப.ஆ.), 1877 கூர்மபுராணம், இலக்ஷ்மீ விலாச அச்சுக்கூடம், சென்னை.
3. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.), 1894 புறநானூறு மூலமும் உரையும், வெ.நா. ஜூபிலி அச்சுக்கூடம், சென்னை.
4. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.), 1930 தக்கயாகப்பரணி மூலமும் உரையும், கேஸரி அச்சுக்கூடம், சென்னை.
5. சேந்தன் திவாகரம், பிங்கலம், சூடாமணி, 2004 சாந்தி சாதனா, சென்னை.
6. சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.), 1957 பரிபாடல் மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை.
7. சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.), 1970 சூளாமணி, கழக வெளியீடு, சென்னை.
8. தமிழ்ப் பேரகராதி, 1982 சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
9. தாமோதரம்பிள்ளை, சி.வை. (ப.ஆ.), 1887 கலத்தொகை நச்சினார்க்கினியர் உரையுடன், The Scottish Press, Madras.
10. துரைசாமிப் பிள்ளை, ஔவை.சு. (உ.ஆ.), 1950 பதிற்றுப்பத்து மூலமும் விளக்க உரையும், கழக வெளியீடு, சென்னை.
11. தேவநேயப் பாவாணர், ஞா., 1990 ஒப்பியன் மொழிநூல், கழக வெளியீடு, சென்னை (மறுபதிப்பு).
12. பதிப்பாசிரியர் குழு, 1976 கம்பராமாயணம், கம்பன் கழகம், சென்னை.
13. மயிலேறும்பெருமாள் பிள்ளை (உ.ஆ.), 1911 கல்லாடம், மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை.
14. வேங்கடசாமி, மயிலை சீனி., 2011 புத்தரின் வரலாறு, சந்தியா பதிப்பகம், சென்னை (மறுபதிப்பு).
15. வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.), 1943 அகநானூறு – களிற்றியானை நிரை, கழக வெளியீடு, சென்னை.
16. வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.), 1924 களவழி நாற்பது, கழக வெளியீடு, சென்னை.